உ

சிவமயம்.

# வேதாந்தக் கும்மி.

சாக்கை

வேதாந்தமடம்

பிரம வித்தியா பிரசாரண சபைக்

காரியதரிசி

கண்டனூர்,

நா. பெ. நா. மூ.

முத்துராமையா அவர்களால்

இயற்றப்பெற்று

தேவகோட்டை

"எஸ்டேட் பிரஸில்"

அச்சிடலானது.

1920

சிவமயம்.



# வேதாந்தக் கும்மி.

## கடவுள் துதி.

1. செந்தமி ழாலுறும் வேதாந் தக்கும்மி
சிறப்புடனே மிகப் பாடுதற்குப்
பந்தம கற்றுநம் வன்னிவி நாயகர்
பாதாம்பு யத்துணை காப்பாமே.

2. பூதல மீதி லுயர்வா னமிகப்
பொற்புள வத்துவி தமாகும்

வேதாந் தக்கும்மி விளம்பிட ஷண்முக
வேலாயு தன்பதங் காப்பாமே.

3. நற்றவத் தோருணர் வேதாந்தக் கும்மிப்பா
நாதமு டனேநாம் பாடு தற்குப்
பற்றுவிட் டோர்க்கருள் கொற்றவா ளீசர்
பாதாம்பு யத்துணை காப்பாமே.

4. அருமைப் பதங்க ளமைந்தயர் கும்மியை
அன்புட னேநன்கு பாடு தற்குத்
திருநெல்லை நாயகி பாதாம்பு யத்துணை
சிந்தித்து வாழ்த்திநின் றேத்தி னனே.

5. காண்டற் கரியதாம் வேதாந்தக் கும்மியைக்
களிப்பு டனேநாம் பாடு தற்கு
ஆண்டவ னாகவி ளங்கிடு முக்தரா
ஐயன் திருவடி காப்பாமே.

6. கோதிலா வேதாந்தக் கும்மியைப் பாடிட
கோவிலூர் தன்னி லேயு றையுஞ்
சாதுக்க ளானபெ ரியோர் திருவடி
அஷ்டாங்கங் குவித்துநின் றேத்தினனே.

7. ஏகமே யாமத்து விதமு தல் வாக்கியம்
எடுத்தோதிக் கும்மியைப் பாடு தற்கு
நாதனிங் கண்டுரு பாதாம் புயத்துணை
நாடோறும் வாழ்த்திநின் றேத்தி னனே.

## நூல்.

8. வேதாந்த நூலுக்க திகாரி முத்தாப
வேதனை நீங்கவே யாசை கொண்டு
சாதனை நான்கும மடைந்தே குருவினைச்
சார்ந்தவ னுமடி ஞானப் பெண்ணே!

9. இருக்கு ந்ருசிய மானவி ரண்டினில்
செப்பருந் திருக்கு என்னு மது
சுருக்கஞ் சாதிவி சாதிசு வகதம்
தோன்று தவத்து நித்திய மாம்.

10. ஒருஞ் சுசாதி விசாதி சுவகதம்
உள்ள திருசிய மாகும் பொருள்
தேரும் பொழுது அசத்திய மாமென்று
தெளிவது வேமிகும் ஞானப் பெண்ணே!

11. அத்தியா ரோபம் அபவாத மென்பது
ஆராய்ந் தறிகின்ற புத்தியி னால்
சித்தத் துறுபந்த மோக்ஷந் தெரிவது
சீரான வேதாந்தம் ஞானப் பெண்ணே!

12. சத்துசித் தானந்த நித்திய பூரணந்
தானென வஸ்து வாரு மதைப்
புத்தியி னுணர்ந் தின்பமுந் துன்பமும்
பொருந்தாதோன்வேதாந்திஞானப்பெண்ணே!

13. தேஹாதி களிலபி மானங்கள் வைப்பதே
தீர்க்கமாப் பற்றிடு பந்தம தாம்

# வேதாந்தக் கும்மி.

மோக மதமபி மானம் விடுவதே
முக்தியென் றெண்ணடி ஞானப்பெண்ணே

14. இரிபுடி யற்றவி டங்களி லேயங்கு
திகழ்கின்ற சாக்ஷியே தானென் றெணிச்
சரியாயு ணர்ந்ததைக் காண்பதுவே யுற்ற
தத்துவ மாவது ஞானப் பெண்ணே!

15. பஞ்ச கோசத்தின் பகுப்பையு ணர்ந்தங்கு
பார்ப்பது வேயிது ஞான மதாம்
உஞ்சம் படிக்குணா ராயற் றிரிவது
உத்தம மல்லடி ஞானப் பெண்ணே!

16. அவத்தாத் திரயத்துஞ் சாக்ஷிநா னென்பதை
அறியாம லிருந்தவஞ் ஞானத் தினால்
புவனத்தி லேபல வாகப் புலம்பும்
புலப்பத்தைக்கேளாதேஞானப்பெண்ணே

17. வேதாந்த நூற்கதி காரிதா னில்லென
விவேக மில்லாது விளம்பிடுவார்
நாதனு ரைத்திட்ட நூல்வழிச் செல்லாதார்
நவிலுவ தாமடி ஞானப் பெண்ணே!

18. மெய்யினைப்பொய்யினைமெய்யாயுரைத்திடும்
வேதாந்த நூலினைப் போன்ற தொரு
ஐயந்த விர்த்தருள் ஆனந்த நூல்வேறு
அவனியி லேதடி ஞானப் பெண்ணே!

19. கற்பனை யான சகத்தனைத்தும்
காரண மானதோர் வஸ்து விலே
சொற்பனம் போலவே தோன்றின தாகவே
துணிந்து கொள்ளடி ஞானப் பெண்ணே

20. அரவதாய்க் கயிறது தோன்றுதல் போலவே
அத்து விதமாஞ் சொரூப மதே
திரமாகுஞ் சகத்தாய்த் தோற்றுவ தாமெனச்
சிந்தையிற் கொள்ளடி ஞானப் பெண்ணே

21. பொன்னும் பணிகளாய்த் தோன்றுதல் போலவே
பொருளே சகத்தாய்த் தோற்று தன்றி
நன்னய மாகாச் சகமது வேறே
நாடுதற் கொன்றன்று ஞானப் பெண்ணே!

22. வாக்குமனதுக்கு மெட்டியு மெட்டாத
வஸ்துவின் தன்மையை யுணர்வ தற்கு
பாக்கிய மானவே தாந்த நூ லன்றியே
பகரவோர் நூலேது ஞானப் பெண்ணே!

23. விவர்த்த பட்சம் என்பது வோவது
வேதாந்த பட்சமே யாகு மடீஇ
பவத்தை யொழிக்குமப் பட்சத்தைப் பார்ப்பதே
பட்சத்தின் மேலாகும் ஞானப் பெண்ணே

24. ஆனையைக் கண்டவக் குருடரைப் போலவே
அறியாத சமயிக ளாங்கு ருடர்

ஊனினைச் சத்திய மாகக்கண் டாரோ
டுறவினை விட்டிடு ஞானப் பெண்ணே!

25. ஏகான்ம பட்சம் யாதென் றறியாது
இயங்கிடும் பல்வகைச் சீவ ரொடு
மோகாதி யிற்சிக்கி முயங்கா திருப்பது
முத்திக்குமார்க்கமாம் ஞானப்பெண்ணே!

26. மாமறை கூறிடும் மாவாக்கி யங்களின்
மகிமை புணராத மாக்கள் பலர்
நேமம தில்லாத நூல்பல பார்த்துமே
நிரயத்துக் காளாவார் ஞானப்பெண்ணே

27. ஞானத்துக் குப்பத்தி சாதன மாமல்லால்
நவிலும் பரமுத்திக் கேது விலை
ஆனாலும் ஓர்பட்சம் பதமுத்தி பத்தியால்!
ஆதலா முண்டடி ஞானப் பெண்ணே!

28. அத்துவி தம்விசிட் டாத்துவி தமோ
டவனியிற் றுவித மாவ தன்றி
மற்ற தற்குநற் சூத்திர பாடியம்
வழங்கவே யில்லேடி ஞானப் பெண்ணே!

29. சுத்தாத் விதசித் தாந்த சைவ மாய்ச்
சொல்லுதற் குயர்ந்த நூல்க ளிலை
வித்தைபதி ஞன்கிற் சொல்லாத தைப்பற்றி
மேவுறூர் பெரியோர்கள் ஞானப் பெண்ணே!

30. சிவர்கட் கருளாலே வேதாந்த பட்சமே
சித்தாந்த மாமெனத் தேறு தற்கு
நாவினு லேதிருத் தேவார வாசகம்
நவின்றனனென்றெண்ணேஞானப்பெண்ணே

31. வருணத்தி னில்லுயர் சங்கரா சாரியர்
வைதிக சைவரே யான தோடு
நிருணய மான வத்துவி தத்தினை
நிலைநாட்டி னாடி ஞானப் பெண்ணே!

32. சித்தாந்த ரானவோர் மாயா வாதிகள்
செப்புவ தாவதென் றெண்ணி டிலோ
முத்தியில்மும்முதலுண்டென் றுரைத்திடும்
மூர்க்க வெறியாகும் ஞானப் பெண்ணே!

33. தரமுள நால்வகைச் சாதிகள் தம்முடைச்
சாதிக்குத் தக்கவாங் கரும முடன்
பிரமமு ணர்ந்தவன் பிராமண னுமெனப்
பேசிடு நன்னூல்கள் ஞானப் பெண்ணே!

34. வீரசை வோரும் விரும்பு வதுமுயர்
வேதாந்த சாஸ்திர மாவதைத் தான்
பாரினில்வேறொன்றைப் பார்த்திடாசேயவர்
பண்பது காணடி ஞானப் பெண்ணே!

35. அத்வை விதமே அரிபிர மாதியாம்
அண்ண லு டையதோர் நிச்சய மென்

றுத்தம மான நூல்களு ரைப்பதும்
உண்மையென் றெண்ணடி ஞானப்பெண்ணே

36. சுருதி யோடுக்தி யநுபவ வாயிலாய்ச்
சொல்வதைக் கேட்டெவர் சொன்னா லும்
கருதியே நாமந்த வழியில் நடப்பது
காரிய மாமடி ஞானப் பெண்ணே!

37. ஞானசம் பந்தன் நாவினுக் கரசன்
நல்வாத வூர்ப்பெரு மானு டன்றா
ஞானதோர் சுந்தரன் வைதிக சைவரே
யாவரென் றெண்ணடி. ஞானப்பெண்ணே

38. வைதிக சைவ ராமவர் நால்வரை
மதியிலாச் சமயிகள் தம்முடனே
ஐதிக மாகவு ரைப்பது வோமிக
அவல மதியடி ஞானப் பெண்ணே!

39. அரிபிர மாதி யானுரு வொன்றென்று
அறியாம லேபல வாறாகப்
பொருளறி யாச்சில பூரிய ருரைப்பது
பொல்லாங்கே யாமடி ஞானப் பெண்ணே!

40. அந்தணர்க் கேமறை சொந்த மென் றாகமம்
அறைந்திடு வாக்கியந் தெள்ளி தாக
சுந்தர மூர்த்தியை வைதிக ரலரெனச்
சொல்லுவ தெம்மதி ஞானப் பெண்ணே!

41. நால்வருள் மூவர்நற் ப்ராமண ராகவும்
நால்வர் குருபூஜை நயத்திடு தல்
மேல்வரு ப்ராமண ரைக்கொடு செய்வது
வேதவி தியாகும் ஞானப் பெண்ணே!

42. ஆதிசை வரென்பதோ ரற்புத சாதியார்
அண்ண லுக்குப் பூஜை செய்ப வர்கள்
நீதிம றையுடன் ஆகம நூறனை
நேரகக் கொள்ளுவர் ஞானப்பெண்ணே!

43. சைவ ரெனுமோர் சாதியில் லேபல
சாதி யாளருஞ் சைவ ரென்றே
உய்வ தற்காக உரைப்ப ரதனாலு
உண்மை தெரிந்திடு ஞானப் பெண்ணே!

44. பதிபசு பாசப் பகுப்பையு ணர்ந்தவன்
பாரினிற் சைவனு மென்றிடு வார்
விதியுண ராச்சைவ னவன்சைவ னுவது
வேடத்தைப் பூண்டன்றோ ஞானப்பெண்ணே!

45. வைதிக சைவ னுவது தானுயர்
மங்கள சாஸ்திரத் தேர்ச்சியினால்
ஐதிக மெய்யை யுணர்ந்தவ னுமென்று
அகத்தினிற்கொள்ளடி ஞானப்பெண்ணே

46. மாயனுக்கு மிகு நேயனடி யுயர்
மங்கை யுமைக்கது கூலனடி

தூயர்கட்கு மிகு தூயனடி மிகத்
தொண்டர்கட் கேயருள் தருவ னடி.

47. சிவனை யரியயன் காணா டியவன்
தேவாதி தேவனே யாவ னடி
பவத்தை யடியாருக் கொழிப்பவ னுமவன்
பங்கயத் தாளிணைச் சூட்டிடு வோம்.

48. மேலோ ருகக்குநல் மேலோனடி யவன்
மெய்யினி லுமைபாதி யாள னடி
சாலோக சாமீபம் தருவான டியவன்
சங்கா நாமந்த ரித்தானடி.

## வேறு.

49. எல்லோர்க்கு மேலாம் இறைவ னடியவன்
இங்கித மானசொ ரூபனடி
நல்லோர் மனத்தினு திப்பா னடியவன்
நாடற் குரித்தான நாதனடி—அவன்
பாடற் குரித்தான பண்ப னடி.

50. மதியைச் சிரசில் தரித்தா னடியவன்
மங்கை மீனாட்சிக் குரிய னடி
நதியைச் சிரசில் வைத்தா னடியவன்
நரியைப் பரியாக்கும் நாதனடி—அவன்
கரிக்கு ருவியைக் காத்தானடி.

51. வேதத்தி னுட்பொரு ளானா னடியவன்
மேலினர்க் கின்பம் விளைப்பானடி

சீதளத் திங்கள்மு கத்துநல் லீர்சித்தம்
தேர்ந்து கும்மி யடியுங்கடி—அவனை
ஓர்ந்து கும்மி யடியுங்கடி.

52. வேத மோதுவ தேதுக் கடி—மிகு
வேள்வியுங் கேள்வியு மேதுக்கடி
போதந் தருநங் கடவுளை யோர்ந்து
புகழ்ந்து கும்மி யடியுங்கடி—அகம்
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி.

53. ஐந்து தொழிலுக்குமோர் இறைவனடியவன்
அருளினால் வேதம் அறைந்தானடி
பந்தமகற்றும் பரமனடி யவன்
பரம் பிரம்ம மான சொரூபனடி—அவ்
வரம்பெறு வோர்க்கோ ருருவனடி.

54. தன்னை யொழித்தவர்க் கென்ன குறையவன்
சச்சித்தா னந்தமா யாவா னடி
முன்னை வினைகளை யொழிப்பனடி மலம்
மூடாமற் கும்மி யடியுங்கடி—புலன்
கூடாமற் கும்மி யடியுங்கடி.

55. ஆங்கார மியாவு மகலுமடி. நம
தன்னைமே லன்பு வைத்தி ருந்தால்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளிருந் தேயங்கு
உகந்து கும்மி யடியுங்கடி—அகம்
நெகிழ்ந்து கும்மி யடியுங்கடி.

56. சிவமே பரமென் றுருகுமடி யிதைச்
சாத்திர மறியாதார் தெரியாரடி
பவத்தை யொழித்தவர் பார்ப்பதடி யவர்
பார்ப்பதே யுயர்ந்த ஞானமடி—வினை
தீர்ப்பதே யுயர்ந்த தீரமடி.

வேதாந்தக் கும்மி
முற்றிற்று.

உ

சிவமயம்.

கண்டனூர்,

ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுரர்

# கப்பற் சிந்து.

இது

பேரி. கண. பழ.

விலாசத்தார் விருப்பத்தின்படி

கண்டனூர்,

நா. பெ. நா. மு. முத்துராமையா

அவர்களாலியற்றப்பெற்றது.


தேவகோட்டை

"எஸ்டேட் பிரஸில்"

பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு.

1920.

# சாற்றுக்கவி.

வேம்பத்தூர் சங்க வித்துவான்களிலொருவராகிய
சா. ஆ. சௌந்தரபாரதியார்
இயற்றியது.

---

சீரிலுயர்வாங் கண்டனூர்
சிறக்க வமர்சுந் தரமென்
பேரிற்கப் பற்பாட்டுச் செய்தான்
பெருமை பெற்றத னவணிகத்
தாரிலுயர் பிரமனித் தியாப்ர
சாரணமா குசெனைப்பயை யமைத்த
நேர்தலுயர் எழுத்தி ராமைய
சீமானே வெங்கடவ பூமானே.

---

உ

சிவமயம்.



# கண்டனூர்,

## ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுரர்

# கப்பற்சிந்து.

ஏலேலோ தத்தய்யா கப்பல் ஏலேலோ.

சீர்வளருந்தனவணிகர்—திகழுஞ்
சிறந்தகண்டனூரதனில்
ஏர்வளர்மீனாட்சிசுந்த—ரேசற்
கிசைந்த கப்பற்றமிழுரைக்க

(முடுகு)

அளவிலாச்சுந்தரனம்பிகைபுகந்தோ, னன்பருக்கருள்புரியுமானந்தவடிவேலோன், புளகமாககரவாரணத்துமுகயோகன், பொன்னுலகோர்முதற்போற்றும்வைபோகன், வளமானவல்லபையையிடம்வைத்தமோகன், வாசாமகோசரமாகின்றசொரூபன், உளதானகிரிகைக்குமுன்னுற வணங்குமுத்தமர்க்கருள்புரியுமைங்கரன்றுணையே.
(ஏலேலோ)(க)

தேசமெல்லாம் புகழுங்கண்டனூரிற்
செல்வசுந்தரேசர்மீனாள்
வாசமுள்ள கப்பலுமே—மிக்க
மகமேரு போல் விளங்கும்.

(முடுகு)

வேதமெனுங்கடலிலே செல்லுகின்றதான, விஸ்தாரமாங்கப்பலாகமங்களாகும், போதமாம் புராணங்களோராவுமாகும், பொற்புமிகுசாஸ்திரந்தட்டுக்களாகும், ஏதமில்லாமிருதிபாய்மரமதாகு, மெழிலானகீதையுஞ்சுக்கானிதாகு, நாதனுஞ்சற்குருமாலியவாளுய், நன்மையாம்வாதனைப்பாய்க்கட்டியோட்ட. (ஏலேலோகப்பல்) (2)

சோலைமிகச்சூழுங்கண்டனூரிற்
சுந்தரமீனும்பிகையாள்

சாலமிருங்கப்பலுக்குத்—தக்க
சாதுக்களேயெசமானும்.

(முகே)

தூலகூக்குமமான காரணதேகஞ், சொந்த
மாயபிமானம் வைத்துமேவிடயஞ், சாலவேசென்
றபிமுராகத்துவேஷஞ், சலியாத காமமொடு
குரோத லோபங்கள். ஏலமுளமோகமதமச்சரம
சூசை, யிரிசைடம்பமுடனதற்பமாங்காரம்,கோல
முளதப்புவஞ்சனைசோரமிடும்பை, கொலைமுதற்
பாவிகளை யேற்றுமல்விட்டு. (ஏலேலோ) (3)

மங்களமாய்மகிழுங்கண்ட—ஊரில்
வள்ளல்சுந்தரேசர்மீனுள்
துங்கமதாங்கப்பலுக்கு—ரிஷபத்
துடுக்கான கொடிகட்டி.

(முகே)

தாரமர்விவேகனொடுமிருபகன் பொறுமை,
சந்தோட னொடுசமன்றமன்விராகன்றன், ஆர்
மருவுமியமாதியெண்மர் சத்துவனும், அமுத
சீலன்சாந்திவிசாரசந்தோடன், ஏர்மருமயித்திரி
முதிதைபொடுபேட்சை, வியல்பானகருணையுள
முத்தர்களையேற்றி, ஓர்மறுவிலாதபரிபூரணவூருக்
குடனேசென்றிரங்கி மிகவானந்தமுற்றார். (ஏ)(4)

தனவணிகர் சூழுங்கண்ட—னூரில்
சம்புசுந்தரேசர் மீனாள்
வனமுளகல்யாணமது—நடத்த
மாணிக்கக்கப்பலுமே.

(முடுகு)

வங்காளம் வெம்பாயிபட்டண மிலங்கை மாநகர்போய்வரமாதமூன்றாகும், கங்கைபோற் செலமதைப் பீப்பாயடைத்துக், கணக்குடனரிசி முதற்சாமான் சமைத்துச், சிங்காரமானதோர் பாய்தனையெடுத்துத், திடமானகயிறுகளைச்செம் மையாயிறுக்கி, எங்குமீனக்கொடியிலங்கவேகட்டி யிதமானமார்க்கத்திற் சுக்கானைத்திருப்பி, அங்க முளமானகப்பித்தான்களையுந்தட்டி, யன்புடன்மீனா ட்சியையகத்தினிற்கொண்டாடித், தங்கமலோங் கிவருமலைகளைப்பார்த்து, தண்ணீரைரெட்டைக் குழல்வேம்பாயாற்றட்டிப், பொங்கியேகடலூரங் கொள்வதைப்பார்த்துப், பொலிவானவிடமதில் நங்கூரத்தைப்போட்டுத், துங்கமுளசவுக்காவைப் பார்த்துமேயோட்டுச், சூழவேதோணிசுருப்போ டுடன்கூட்டு, மங்காதசனிக்கண்ணாடியைப்பார் த்து, மட்டிலாப்பிரங்கிவேட்டுகளைத்தீர்த்துச், சங் கமாய்ப் பாறைமலையாதியைச்சார்ந்து, தட்டா மல் மகாமீன்முட்டாமலோட்டு, இங்கொருமூலை யிற்றோணுதொருகப்பல், எக்காமலதைநோக்கிச் சுக்கானைத்திருப்பு, பிங்கலந்திசைதனிற்பிசகாமற்

பார்த்துப், பெருக்கான தண்ணீரிற் சுருக்காக
விட்டு, லாங்காள்ம்துறைமுகம்வந்திடப்பாரு,வழி
யாயிரங்கிமிகச்சாமான்களைவாங்கு (ஏலேலோ) (5)

கழனிமிகச்சூழுங்கண்ட—னூரில்
கன்னிமீனாட்சிசொக்கர்
வழியானகப்பலுக்குத்—தெளிவாய்
வாங்குகின்றரத்னவகை

முடுகு

இந்திரன்றன்னல்லவாகூரான்முன்னு, விறந்
திடவவனுடலெலும்பெலாம்பண்டு, தந்திரவாத்
தினல்ரத்தினமுமாகிச், சமைந்ததுவேவோட்டிலத்
தினுண்டான, சுந்தரமாய்த்தோற்றமிவையெலாம்
பார்க்கச், சுடரொளிவிட்டிலங்குதூக்கமேயாக,
சந்திரன்போல்விளங்குமுத்துத்தானிதுவேவா,தகை
மையார் தூத்துக்குடிச் சமுத்திரத்திலுண்டாம்,
அந்தமதாமிந்தவயிரமோமிகவு, மதிகமாஞ்சிங்கப்
பூர்பினங்கிலமரிக்கா, சொந்தமுளமாணிக்கமாகு
மிதுமெத்த, துலங்கிடும்ரெங்கோன்அவாவுசீனத்
தில், தந்திரமாய்க்கிடைத்ததாமிந்தக் கோமே,
தகமதுமகப்படாத்தரணியிற்சுருக்காய், வந்ததிர்
தப்பாவளமதுதானுமேயெங்கும், வாங்கவுமகப்
படாவங்காளமன்றி, நந்தமதாகும்வைடூரியமெங்
கும், நாளுக்குநாள்விலைகூடவேயாகும், புந்தியி
னுணர்ந்திடப் போகுமோவிந்தப், புட்பராகந்தா

னுங்கிடைத்திடுமாத்திரஞ், சிந்தையில்நினையாது
வந்திருந்தநிலவு, தேவலோகத்தி லுண்டானது
போற்சொல்வர், பந்தமாமரகதப்பச்சையிதன்
பெருமை, பகர்வதற்குச்சேடனும்போதாதுபார்த்
தால், எந்தவுலகத்திலுங்கிடையாதிதெல்லா, மிப்
போதுகிடைத்ததுமீனாட்சிகிருபை. (ஏலே) (6)

கண்டனூருவந்திருக்கு—மெங்கள்
கன்னிமீனாட்சிசுந்தரர்
தொண்டர்புகழ்கப்பலிலே—வருஞ்
சுயமானசரக்குவகை.

(முடுகு)

சுக்குதிப்பிலிமிளகுவெங்காயம்பூண்டு, சுய
மானவெந்தயங்கடுகுகற்பூரம், துவரானகடுக்காய்
சதகுப்பையோமம், சொல்லொணைப்பெருங்காயம்
அபினியொடுகஞ்சா, மிக்கநல்மிளகாய் கல்லுப்
புடன்மிளகு, வெட்பாலையரிசிசிறுநாகப்பூ ஏலம்,
மேலான சாதிக்காய்சாதிப்பத்திரியும், வேகமுள
இராம்புடன்வாய்விளங்கமதுவுந், தக்கஅக்ரகாரம்
அதிவிடையமஞ்சள், சடாமஞ்சி லவங்கமொடு
தாளிசபத்திரியும், தக்கோலம்வலம்புரிக்காய்கொ
த்தமல்லி, தன்மையுளசீரகமரத்தையொடுகூகை,
பாகமுளகோதுமைகொத்தமலியரிசி, பகரொணச்
சவ்வரிசிபச்சரிசிமஞ்சள், பண்பானபேரீச்சம்பழ
மோடுமுந்திரிப், பழமெலாம்வந்துமே பரிவுட
னிறங்க. (ஏலேலோ) (7)

மன்னுலகோர்போற்றுங்கண்ட—னூரில்
மகிழுஞ்சுந்தரேசர்மீனாள்
தன்னயமாங்கப்பலிலே—வந்த
நயமானபட்டுகளாம்.

(முடுகு)

அணியானமேகலை காஞ்சி கும்பகோணம், அழுத்தமுளாநாகமடிப் பட்டுடன்மதுரைத், திணியான பொற்சரிகைச்சேலையொடுவர்னச், சேலைகளுஞ்செல்வமீனாட்சிக்குக்கொடுக்கத், துணிவானசகபிரட்டி வேலூதார்ப்பட்டுத், தூய்தானசம்பந்திக்காகுமிதுகட்டு, பணியாகப்பாடுமிந்தப்பெண்களுக்குயர்ந்த, பஞ்சவர்னச்சேலைபார்த்துமேயுவப்பக், கணிதமுளாநாத்திமார்க்காகுமிந்தருத்ர,கண்டிச்சேலையையெடுத்துக்கட்டுடன்பத்திரம், மணியானமாமிமார்க்காகுமிந்தச்சிந்தா, மணிச்சேலைவாங்கியேவகையுடன்சேர்க்கத், தணிவிலாக்கோலமிடுஞ்சுந்திமாரணியத், தக்கதிதுசவுக்காளிகட்டலைப்புட்டாணி, குணியானபாங்கியர்க்குவங்காரகண்டி, குணமானசேடியர்க்குச் சொர்னமுகிச்சேலை, பிணியானதைநீக்கு விழிமிரட்டிச்சேலை, பேதைவெள்ளாட்டிக்குக் கொடுக்கலாம் பேனு, இணையிலாச்சிட்டர்களுக்காகுமிந்தசால்வை,யெங்குமேயகப்படாவங்காளமன்றி,மணவரைக்காகுமிக்தக்குண்டஞ்சிச்சேலை, வாங்கிவைத்தபோதுகொடுக்கவாரேர்த்தி... [illegible] வைவுயொடுதாம்ப

ரங்கள், பெரியோர்கட்காகுமிதுபேணியேகொடுக்கத், துணையானமன்னர்க்குக்கொடுக்கத்தானுயர்ந்த, துப்பட்டாகெண்டைச்சீர் தப்பாமலிருக்க, பணியானபட்டணஞ்சேலநாமக்கல், வங்காளங் கும்பகோணத்திலுளதான, கனிசமுள புடவையிதுசுந்தரர்மீனாட்சி, கல்யாணமுன்னிட்டுவாங்கி வந்ததிதுவே. (ஏலேலோ) (8)

மேலாமேனூர் போற்றுங்கண்ட—னூரில்
விமலர்சுந்தரேசர்மீனாள்
மாலானகப்பலிலே—பொழுங்காய்
மன்னர்வரும்வரிசைகளாம்.

(முடுகு)

அன்புமிகு அங்கமருணம்முடனவந்தி, ஆந்திராமிலாடமிகுயவனமொட்டியமும், கன்னடங் கன்னடம்காசங்காஷ்மீரம், காந்தாரங்காம்போசங்கருசமுடன்கலிங்கம், கொன்னுதவுகோசலங் குருகுகூடகஞ்சேர், குந்தளங்குருவிந்தங்கூர்ச்சரங்கொல்லம், தென்னவன்கிராடமொடுசால்வஞ் சவ்வீரஞ், சிங்களஞ்சகஞ்சிந்துசீனகொங்கணமும் சொன்னதயமாஞ்சோழசோனகந்துளுவஞ், சூரசேனந்திராவிடம்தெங்கணமும், நின்மலமதான தோர்கிடதகேகயமும், நேர்பாளபாஞ்சாலபப்பர பல்லவமும், மன்னுபோடம்புலிந்தமகதமொடுமச்சம், மாளவமாடமொடுமலையாளம்வங்கம், நன்ன

யமதாபுகந்தவங்காளம்விதர்ப்பம், நாட்டரசரன்
பத்தாறார்பேரும்வந்தனரே. (ஏலேலோ) (9)

சுந்தரமாய்விளங்குங்கண்ட—னூரில்
சுந்தரமீனாம்பிகையாள்
அந்தமுளகப்பலிலே—வந்த
அபிஷேகச்சாமானும்.

(முடுகு)

சந்தனங்குங்குமங்களபகஸ்தூரி, தகைமை யாம்பச்சக்கற்பூரஞ்சவ்வாது, அந்தமுளகோரோசனைகொச்சிமஞ்சள், அருமையுளசெந்தூரம்வங்காளம்பச்சை, சிந்துதேசாம்பிராணித்தயிலஞ்சம்பங்கி, சிறப்பான வெம்பாயிப் பன்னீரும்புழுகும், கந்தமுளவெட்டிவேர்விலாமிச்சைவேருங், கணக்கிலமையாததாலிணக்கமாய்வைக்க,
(ஏலேலோ) (10)

---

கல்விமிகவிளங்குங்கண்ட—னூரில்
கவுரிமீனாட்சிசுந்தரர்
செல்வமதுவளர்ந்தேறக்—கருணை
சிறக்குங்கப்பற்பாட்டிதுவே.

(முடுகு)

வேதப்பிராமணர்கள்மிகவோங்கவாழி
வெண்குடையரசர்தஞ்செங்கோலும்வாழி

ரீ தேடமுனைவணிகருக்குத்திருவும்வாழி
நிலையான அறம்பொருளின்பமும்வாழி
சாந்தமதானமீனாட்சிசுந்தரேசர்
தமைக்கையடியாள கல்யாணமிகடைக்கவாழி
நாடுமுனைவேதாந்தசாஸ்திரமும்வாழி
நாகலிங்கதேசிகனுள்ளேதாமும்வாழி. (உ. 3லை)

கப்பற்சிந்து முற்றிற்று.